மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, அதாவது மாநில அரசாங்கத்திலே உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கு சம்பள விகிதம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கேள்விக்கு நான் விடையளிக்க வேண்டியதில்லை. கார்ப்பொரேஷனில் பணியாற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் அதாவது ஸ்டெனோகிராபர்ஸ் ஆகியவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அதிகம் இல்லை. அரசாங்கத்திலே இருப்பவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு இருக்கிறது. கார்ப்பொரேஷனில் பணியாற்றுபவர்களுக்கு இந்தப் பதவி உயர்வு வாய்ப்பு இல்லையென்று 1964-ல் இருந்தே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த அளவில் கொடுத்தால்தான் இம்மாதிரியான வேலைக்கு வருகிறார்கள். இல்லாவிடில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமை நீடித்து வருகிறது.

உதகை நகராட்சி மன்றம்

*125 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 12—3—1969-ல் நடைபெற்ற உதகை நகராட்சி மன்றக் கூட்டத்தில் எல்லா உறுப்பினர்களும் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனரா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) அந்நாள் ஆணையரது போக்கைக் கண்டிக்கும் வகையில் வெளி நடப்பு நிகழ்ந்தது. அவ்வாணையர் வேறிடத்துக்கு தற்பொழுது மாற்றப்பட்டிருக்கிறார்.

Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act

*126 Q.–Dr. H. V. HANDE, Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR and Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that this Government has constituted a five-member committee to examine the provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act and make suitable suggestions for amendment; and

(*b*) the details thereof and the terms of reference ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1960-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை ஆய்வு செய்து, தகுந்த திருத்தங்களைச் செய்வது குறித்து கருத்து வழங்க அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உள்துறையின் அரசுச்செயலாளர் இக்குழுவின் தலைவராவார். இடவசதிக் கட்டுப்பாடு குறித்து பொறுப்பு வகிக்கும் உள்துறை துணைச் செயலாளர் இக்குழுவின் செயலாளர் ஆவார். சட்டத் துறையின் அரசுச் செயலாளர், சென்னையிலுள்ள இடவசதிக்கட்டுப்பாட்டு அதிகாரி, சென்னை தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), சென்னையிலுள்ள அரசு வழக்குரைஞர் ஆகியவர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

இந்தக் குழு 1960-ம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் நியாய வாடகையை முடிவு செய்வதற்கான கோட்பாடுகளை மாற்றியமைப்பது குறித்து ஆய்வு செய்து, 4-ம் பிரிவிற்குத் திருத்தங்களைச் செய்வது குறித்து கருத்துரைகளை வழங்குவதோடு, 3-வது பிரிவில் கண்டுள்ள இடவசதிக்கட்டுப்பாட்டு விதித்துறைகள் உட்பட இந்தச் சட்டம் முழுவதும் செயல்படுவதை மதிப்பிட்டு, 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குப் பிறகு இந்தச் சட்டத்

1970 பிப்ரவரி 26]

தின் செல்திறன் கால அளவை நீட்டிப்பதற்கான தேவையைப்பற்றியும் ஆய்வு செய்யும். நன்கு விளம்பரப்படுத்திய பிறகு ஆய்விலுள்ள பொருள் குறித்து, இக்குழு பொது மக்களிடமிருந்தும் வழக்கறிஞர் சங்கங்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்று வருகிறது. இக்குழு 30—4—1970-க்குள் தனது அறிக்கையை அரசுக்குப் பணிந்தனுப்ப வேண்டும்.

திரு கே. விஞயகம் : தற்போது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவிலே உத்தியோகஸ்தர்கள்தான் இடம் பெற்றிருக்கிறுர்களே தவிர இந்த மசோதாவாலே பாதிக்கப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களோ, குடியிருப்பவர்களோ அல்லது அவர்களுக்காக வாதாடுகின்ற வழக்கறிஞர்களோ இல்லை. இதன் காரணமாக இந்தச் சட்டம் ஒட்டையாக இருக்கிறது, பயன்படாமல் இருக்கிறது. ஆகவே பிரதிநிதிகளாக இவர்களில் இருந்தும் போடவேண்டும். வழக்கறிஞர்கள், எங்களைப் போன்றவர்கள் அல்ல, யாராக இருந்தாலும் அவர்களையும் போட்டு இந்தச் சட்டத்தை ஒரு காம்ப்ரஹென்ஸிவ் சட்டமாக ஆக்கக்கூடிய முறையிலே—ஏனென்றுல் இந்தச் சட்டம் மூன்று ஆண்டுக்கொருமுறை நீடிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. எனவே காம்ப்ரஹென்ஸிவ் சட்டமாக வரக்கூடிய முறையிலே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

THIRU K. VINAYAKAM : I am trying to safeguard the Government. They bring forward a Bill and we tear it into pieces in the Court of law.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே இந்தச் சபையைக் காப்பாற்றுங்கள்.

திரு. கே. விஞயகம் : நல்ல எண்ணத்தோடு நான் சொல்கிறேன். அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன். அவர்களையெல்லாம் இந்தக் குழுவிலே போட்டு இந்தச் சட்டத்தை ஒரு காம்ப்ரஹென்ஸிவ் சட்டமாகக் கொண்டுவர முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இதைப்பற்றி எல்லா பார் அசோஸியேஷன்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. குடிசை வாழ் சங்கங்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. குடிசை வாழ்வோருக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கும் பத்திரிகை மூலமாக வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுடைய கருத்துக்களை அங்கே சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமயத்திலுள்ள காட்டுப் புறம்போக்கு நிலங்கள்

***127 விஞ—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியில் பரம்பரை பரம்பரையாக வேளாண்மை செய்துவரும் காட்டுப் புறம்போக்கு நிலங்களைப் பயிரிடுவோருக்கே அடைமானம் செய்துகொடுக்க வேண்டி, அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) விஞ எழவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, முன்னலே இருந்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திருமயத்திற்குச் சுற்றுப்பயணம் வந்திருந்தபொழுது அந்தக் காட்டுப் புறம்போக்கு நிலத்தைப் பயிரிடுவோருக்கு அடைமானம் செய்வதாகச் சொன்னர்கள். எனவே, அரசு அதனை ஆராய்ந்து ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.